# என்னை இழந்தேன் உன்னில் கலந்தேன்

என்னை இழந்தேன் உன்னில் கலந்தேன்
இன்பம் இதுவென்றேன்
இந்நிலை தன்னில் நிலைத்திடும் அருளை
யேசுவே வேண்டி நின்றேன் -2

**1)**
வழியே தெரியாமல் வார்த்தைகள் புரியாமல்
விழித்தே மலைத்து நின்றேன் -2
வெகுவாய் மனம் தளர்ந்தேன்
எளியவன் நிலைகண்டு
இரங்கியே அருள்கூர்ந்து -2
அழைத்துச் செல்வதற்கே அருகினில் வந்தாயே
அருகினில் வந்தாயே

( என்னை இழந்தேன் )

**2)**
உயர்மலை மீதினிற்கு உன்னுடன் வரச்சொல்ல
அயர்வே தெரியாமல் -2
அருகே நான் நடந்தேன்
தயங்கியே இங்குவர காரணம் நான் கேட்க- 2
தயவாய்த் தந்த இடம் வேண்டிடப் பணித்தாயே
வேண்டிடப் பணித்தாயே

( என்னை இழந்தேன் )